**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Crl.M.P.23/2025**

Deposition of PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : கல்வி | Defence | : |
| Husband Name | : கனகராஜன் | Court | : |
| Village | : புதுப்பேட்டை, தரங்கம்பாடி. | Taluk | : |
| Calling | : | Religion | : |
| Age | : 60 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day. 05.02.2025.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை:-**

நான் இந்த வழக்கின் புகார்தாரர் ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு நன்றாக தெரியும். இந்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

03.07.2021 அன்று எதிரி எனது கணவரிடமிருந்து ரூ.10,00,000/- பெற்றுக்கொண்டதற்காக எழுதிக்கொடுத்த ஆவணம் அசல் **ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 17.05.2022 தேதியிட்ட எனது கணவர் மேற்படி தொகை சம்பந்தமாக எதிரிக்கு எதிராக புதுக்கோட்டை மீமீசல் காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கான மனு ரசீதின் அசல் **ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 30.05.2022 தேதியில் எனது பெயர் குறிப்பிடாமலும், W/o.கனகராஜ் என்று மட்டும் குறிப்பிட்டும் எனக்கும், எனது கணவருக்கும் எதிரி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அசல் **ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 17.11.2023 தேதியிட்ட ரூ.5,00,000/-த்திற்கான I,C,I,C.I வங்கி, செய்யானம் வங்கிகிளையின் 000738 என்ற எண் கொண்ட காசோலையின் அசல் **ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 09.02.2024 தேதியிட்ட தரங்கம்பாடி இந்தியன் வங்கியால் Account Closed என்ற காரணத்துடன் திருப்பப்பட்ட திருப்புதல் குறிப்பாணையின் அசல் **ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் கடந்த 05.03.2024 அன்று எதிரியின் வழக்கறிஞருக்கு நான் அனுப்பிய பதில் அறிவிப்பின் அலுவலக நகல் **ம.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 09.03.2024 அன்று மேற்படி பதில் அறிவிப்பினை எதிரியின் வழக்கறிஞர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அஞ்சல் அட்டை **ம.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 12.03.2024 அன்று காசோலை எண் மற்றும் வங்கியின் விபரங்கள் தவறுதலாக குறிப்பிடப்பட்டது என்றும் சரியான காசோலை எண் மற்றும் வங்கியின் விபரங்களை குறிப்பிட்டு எதிரியின் வழக்கறிஞருக்கு அனுப்பிய அறிவிப்பு அசல் **ம.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 16.03.2024 அன்று மேற்படி அறிவிப்பினை எதிரியின் வழக்கறிஞர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அஞ்சல் அட்டை **ம.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.